සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| මගේ අංකය / எனது இல / My No | ඔබේ අංකය / உமது இல / Your No | දිනය / திகதி / Date |
|---|---|---|
| DSD/HO/17/Legal/Empowerment/2026 | ........................................ | 2026.01.28 |

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2026/07**

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
பிரதி/உதவிப் பணிப்பாளர்கள்

**குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் சட்டரீதியான சிக்கல்களை தீர்த்துக் கொள்ளும் பொருட்டு சட்ட ரீதியான விழிப்புணர்வூட்டம் வேலைத்திட்டங்கள் மற்றும் சட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்.**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் சட்ட உதவி ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் அஸ்வெசும பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளின் பொருட்டு சட்டரீதியான வலுவூட்டல் வேலைத்திட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

02. தான் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற சட்டச் சிக்கல்களை, சட்ட ரீதியான சிக்கல் ஒன்றாக இனம் காணத் தவறுகின்றமையும், அதிக செலவுகள் காரணமாக அச்சிக்கல்களை தீர்த்துக் கொள்ள முடியாமையும், அறியாமை காரணமாக சட்டத்தின் பாதுகாப்பு நிலை கிடைக்காமையும் இந்த குறைந்த வருமானம் பெறும் மக்கள் அடிக்கடி முகம் கொடுக்கின்ற பிரச்சனைகளாகும்.

03. குறைந்த வருமானம் பெறும் மக்களின், அப்பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு தேவையான சட்ட நிவாரணங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சட்ட உதவி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன குழுவின் சட்டத்தரணிகளது ஒத்துழைப்புடன் சட்டச் சிக்கல்களை இனம்காண்பது, உளவளத்துணை மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளின் பொருட்டு கவனத்தினை செலுத்துவதும் இந்த வேலைத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

04. ஒரு நாளைய வேலைத்திட்டம் ஒன்றாக ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்த வேலைத் திட்டத்தின் மூலம் மக்களை சட்டம் தொடர்பில் விழிப்புணர்வு ஊட்டுவதும் ஒவ்வொரு நபரினரும் தனிப்பட்ட சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு சட்டம் தொடர்பான விளக்கங்களை நடாத்துவதும் இங்கு மேற்கொள்ளப்பட உள்ளது.

05. ஆகையினால் தங்களது மாவட்டத்தின்/பிரதேச செயலகப் பிரிவின் உத்தியோகத்தர்களை விளக்கம் அளித்து பொருத்தமான பயனாளிகள் ஆகக் குறைந்தது 50 பேரை இதில் கலந்து கொள்ளச் செய்யக்கூடிய இடம் ஒன்றில் வேலைத் திட்டத்தினை நடாத்துவதற்கு திட்டமிட்டு அதற்கான மொத்த செலவு மதிப்பீடொன்றுடன் துரிதமாக சட்டப்பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு வினயமுடன் அறியத் தருகின்றேன்.

06. அத்தகவல்கள் கிடைத்ததன் பின்னர் பிரதேசத்திற்கு சொந்தமான நீதிமன்ற அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள சட்ட உதவிகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்து மேற் சொன்ன வேலைத் திட்டத்தின் பொருட்டு சட்டத்தரணிகளை கலந்து கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என மேலும் அறியத் தருகின்றேன்.

1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director (Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

07. 2026 ஆம் ஆண்டின் பொருட்டு 40 வேலை திட்டங்களுக்கு பொருட்டு நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதனால் குறைந்த வருமானம் பெறும் மக்களது சட்டரீதியான சிக்கல்களை இலவசமாக தீர்த்துக் கொள்வதற்காக உள்ள இந்த சந்தர்ப்பத்தினை மக்களுக்கு வழங்குவதற்கு தங்களது விசேட கவனத்தினை செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு - எஸ்.ஆர். விஜேசேக்கர(பணிப்பாளர் சட்டம்) - 071-4455148
ஜனக்க கொல்லல்பிட்டிய (முகாமையாளர்) - 071-4425637

சீ.டீ.களுஆரச்சி
பணிப்பாளர் தலைமை அதிபதி

பிரதிகள்.:

01. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
02. தலைவர், சட்ட உதவி ஆணைக்குழு - த.கூ.க. பொருட்டு
03. மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதி (நிர்வாகம்), சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
04. மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதி (திட்டமிடல்), சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
05. மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதி (அபிவிருத்தி), சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
06. சகல பிரிவுத் தலைவர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
07. பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
08. பிரதான உள்ளக கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
09. தலைமை பீட/சமுர்த்தி வங்கிச் சங்க/சமூக அபிவிருத்தி/கருத்திட்ட/சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள். - த.கூ.க. பொருட்டு

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)